திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, சட்டசபை, சட்ட மன்ற மேலவைகளின் உறுப்பினர்களுக்கு ஃப்ரி பாஸ் கொடுத்திருந் தார்கள். இப்பொழுது அரசாங்க பஸ்களை கார்ப்பொரேஷனுக ஆக்கிவிட்டதால் அந்தச் சலுகை நீட்டிக்கப்படுமா அல்லது பறிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த சலுகை நீடிக்கப்படும்.

Re-treading of tyres

* 400 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken to get the tyres of Transport buses re-treaded in the Department Workshop itself?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை போக்கு வரத்து இல்லத்திலும், நாகர்கோயில் ராணித் தோட்டம் பணிக் களரியிலும் உள்ள இரு டயர் புதுப்பிக்கும் பிரிவுகளில், அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளின் டயர்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், நாகர்கோயில் ராணித் தோட்டத்திலே இப்பொழுது அமைந்திருக்கும் அந்த ஓர்க்ஷாப் எல்லா அமைப்புகளையும் பெறவில்லை. ஆகவே அதை விஸ்தரித்து போதிய வசதிகளை ஏற்படுத்த அமைச்சரவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நாகர்கோயிலில் இப்பொழுது நாள் ஒன்றுக்கு 24 டயர்கள் புதுப் பிக்கும் வசதிகள் இருக்கின்றன. அவர்களும் கடந்த ஆண்டு 5,702 டயர்களைப் புதுப்பித்திருக்கிறார்கள். ஆகவே வேலை ஒழுங் காகத்தான் நடைபெறுகிறது. அப்படி எதுவும் பொருள்கள் இல்லை என்றால், பற்றுக்குறை ஏற்பட்டால் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திருமதி த. ந. அனந்தநாயகி : புதுப்பிக்கப்பட வேண்டிய எல்லா டயர்களுமே இந்த இரண்டு இடங்களில்தான் ரிட்ரீட் செய் யப்படுகிறதா ? அல்லது வெளி கம்பெனிகளுக்கும் கொடுக்கப்படு கிறதா ? அப்படிக் கொடுத்தால் எந்தெந்தக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்படுகிறது ?

1972 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கப் போக்கு வரத்துத் துறைக்கான எல்லா டயர்களும் இந்த இரண்டு இடங் களிலேதான் புதுப்பிக்கப்படுகின்றன. வெளியிலே யாருக்கும் தரப்படுவதில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாகர்கோயிலில் டயர் புதுப்பிக்கும் பிரி வுக்குத் தேவையான ஆட்களை நியமிப்பதற்குள்ள அதிகாரம் அங்கிருக்கும் அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை என்று கூறப் படுகிறது. அங்கு இன்னும் பல சிப்பந்திகள் தேவைப்படு கின்றனர். அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்றுதான் பல இடங்களில் போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப்பட்டிருக் கின்றன. கன்னியாகுமரியில் இருக்கும் ஜாயிண்ட் டைரக்டர் அவர்களுக்கு முழு அதிகாரமும் தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் 1, கேள்வி எண்கள் 376, 377, 378 ஆகியவை மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க 11—3—1972-க்கு தள்ளி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) அமைச்சரின் அறிக்கை.

அமைச்சர் திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் பதவி விலகல் குறித்தும் திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Mr. Speaker, Sir, The Hon. Thiru A. P. Dharmalingam, Minister for Agriculture